7. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999, பேரவையில் அறிமுகம் செய்தல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

“1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.